முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

திட்டக்குடி.

**OS.31/2014 PW:3 29.08.2023**

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் **29** ம் நாள் வாதி தரப்பு சாட்சியாகிய வாலாம்பாள் என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10-வது விதியின் ஏற்பாட்டின்படி திருமதி.T.நித்யகலா, B.Com., B.L., ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வாலாம்பாள் | வயது | 52 |
| க. பெயர் | வெங்கடாசலம் | தொழில் | தலைமை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, இராமநத்தம் |
| ஜாதி | | கிராமம் | ஆக்கனூர் |
| வட்டம் | | மாவட்டம் | |

**முதல் விசாரணை**

1. நீங்கள் எத்தனை வருடங்களாக இராமநத்தம் தொடக்கப் பள்ளியில் பணி புரிந்து வருகிறீர்கள் என்றால் 10 வருடம். உதவி ஆசிரியராக 17 வருடம் பணிபுரிந்தேன்.என்னிடம் காட்டப்படும் 30.07.1979 ல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் வாதியின் கணவர் செல்வம் சேர்ந்ததற்கான விண்ணப்பத்தின் சான்றிட்ட நகல் நான் கொடுத்தது தான் . இந்த சேர்க்கை விண்ணப்பத்தில் தந்தை என்ற பெயரில் அழகப்பன்தான் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். பெற்றோர் கையொப்பம் என்ற இடத்தில் காப்பாளர் கையெழுத்து போட்டிருந்தால் பெற்றோர் என்ற இடத்தை அடித்துவிட்டு காப்பாளர் என்று எழுதுவோம் என்றால் சரிதான். பெற்றோர் பெயர் என்ற காலத்தில் செல்வத்தின் தந்தை அழகப்பன் என்றுதான் உள்ளது என்றால் சரிதான். பாதுகாவலாக இருந்திருந்தால் பாதுகாவலர் என்று குறிப்பிட்டிருப்போம். சேர்க்கை விண்ணப்பம் ஆவணத்தில் 05.07.2023 தேதியன்று என்னால் உண்மை நகல் என்று சான்றிடப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளது அது சா.த.சா.ஆ.1.

**குறுக்கு விசாரணை**

1. 30.07.1979 தேதியில்தான் விண்ணப்பம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த தேதியில் என்னவாக இருந்தீர்கள் என்றால் நான் பிறந்ததே 1979 தான்.

அதனால் விண்ணப்பத்தின் விபரங்கள் தெரியாது என்றால் சரிதான். பெற்றோர் , சவரட்சகர் என்று உள்ளதில் எதையும் அடிக்காத நிலையில் அது பெற்றோரா அல்லது சவரட்சகரா என்பது தெரியாது என்றால் சரிதான். எனக்கு செல்வம் , அழகப்பன் என்பவர்கள் பற்றி தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** இல்லை.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

**(Sd/-)T.Nithyakala**
**Principal District Munsif,**
**Tittagudi.**